# தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை
## (நாரா நிறுவனம்)

# பதவி வெற்றிடம்

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் கீழ் உள்ள தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை (நாரா நிறுவனம்) இலங்கையில் நீரியல் வள விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ வேலைகளை மேற்கொள்ளும் மற்றும் தொடர்பாடல்களை மேற்கொள்ளும் பொறுப்பு உடைய பிரதான தேசிய நிறுவனமாகும்.
நாரா நிறுவனத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு குறித்த தகைமைகள் மற்றும் அனுபவமுள்ள நபர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

**01. பணிப்பாளர் நாயகம் (பதவி 01)**

**வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

01. விஞ்ஞானம்/ விவசாயம்/ வணிக நிர்வாகம்/ பொது நிர்வாகம்/ வணிகம் அல்லது வேறு தொடர்புடைய பாடத்துறையொன்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

மேற்படி பாடத்துறையொன்றில் பட்டப் பின் படிப்பு பட்டமொன்றைப் (Postgraduate Degree) பெற்றிருத்தல் அல்லது முகாமைத்துவம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

பட்டத் தகைமைகளை பெற்றுக்கொண்ட பின்னர் அரச கூட்டுத்தாபனமொன்றில், நியதிகள் சபையொன்றில் அல்லது தனியார் துறையில் நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்திலான பதவியொன்றில் குறைந்தபட்சம் 18 வருட அனுபவம் (குறைந்தபட்சம் இதில் 05 வருடங்களாவது சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.)

**அல்லது**

02. விஞ்ஞானம்/ விவசாயம்/ வணிக நிர்வாகம்/ பொது நிர்வாகம்/ வணிகம் அல்லது வேறு தொடர்புடைய பாடத்துறையொன்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

மேற்படி பாடத்துறையில் அல்லது வேறு தொடர்புடைய பாடத்துறையொன்றில் கலாநிதிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

காலநிதிப் பட்டம் பெற்ற பின்னர் அரச கூட்டுத்தாபனமொன்றில், நியதிகள் சபையொன்றில் அல்லது தனியார் துறையில் நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட சிறந்த சேவை அறிக்கையொன்றைக் கொண்ட உத்தியோகத்தரொருவராக அனுபவம் பெற்றிருத்தல்.

வயது – வெளி விண்ணப்பதாரர்கள் 35 வயதிற்குக் குறையாத மற்றும் 55 வயதிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.
சம்பளத் திட்டம்.

சேவை வகுப்புடன் தொடர்பான சம்பளக் குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு

**HM 2-3 – 1/2025: ரூ. 173,000.00 – 12×ரூ. 4850 = ரூ. 231,200/-**

(2027.01.01 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும் இணைத்துக்கொள்ளல் மற்றும் தரமுயர்த்தலிற்கான சம்பளக் கொடுப்பனவுகள் முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 1/2025 இல் II அட்டவணையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்)

ஏனைய கொடுப்பனவுகள் :- இந்த சேவை வகுதிக்கு உரித்தான, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட குறித்த ஏனைய கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

**01. பணிப்பாளர் நிர்வாகம் மற்றும் மனித வளம் (பதவி 01)**

**விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வள முகாமைத்துவம்/ வணிக நிர்வாகம்/ பொது நிர்வாகம்/ வணிகம் அல்லது பதவியுடன் தொடர்பான பாடத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

குறித்த துறையில் பட்டப் பின் படிப்பு பட்டமொன்றைப் (Postgraduate Degree) பெற்றிருத்தல் அல்லது பதவியுடன் தொடர்பான பாடத்துறைக்கு பொருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனமொன்றில், சபையொன்றில், நியதிகள் நிறுவனமொன்றில் அல்லது தனியார் துறையில் நிறுவனமொன்றில் "முகாமைத்துவ மட்டத்திலான" பதவியொன்றில் குறைந்தபட்சம் குறித்த பாடத்துறையில் பதின்மூன்று (13) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**சம்பளத் திட்டம்:**

HM 1-3 – ரூ. 152,500 – 15×ரூ. 4,100 = ரூ. 214,000/-

(2027.01.01 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும் இணைத்துக்கொள்ளல் மற்றும் தரமுயர்த்தலிற்கான சம்பளக் கொடுப்பனவுகள் முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 1/2025 இல் II அட்டவணையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்)

ஏனைய கொடுப்பனவுகள் :- இந்த சேவை வகுதிக்கு உரித்தான, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட குறித்த ஏனைய கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

**வயது :** 35 வயதிற்குக் குறையாத மற்றும் 55 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

நியமனத்தின் தன்மை :- இந்த இரண்டு பதவிகளும் நிரந்தர, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு உரித்துரிமை கொண்டது.
பொதுவான விடயங்கள் :

**சகல விண்ணப்பதாரர்களும்,**

i. இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.
ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் வேலையை சிறப்பாக நிறைவேற்றுவது போன்றே நாட்டின் எந்த பிரதேசத்திலும் சேவை செய்வதற்கான உடல் மற்றும் உள தகைமைகள் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் ஒழுங்கு**

அனைத்து விண்ணப்பதாரர்களும் உறவினரல்லாத இரண்டு பரிந்துரை செய்பவர்களின் பெயர் மற்றும் முகவரிகளுடன் உங்களது முழுமையான சுயவிபரக் கோவை, ஆரம்ப கல்வி, தொழிற் தகைமைகள் மற்றும் சேவை அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றுடனும் 2026 நவம்பர் மாதம் 10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் பணிப்பாளர் நாயகம், தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை, காக்கை தீவு, மட்டக்குளி, கொழும்பு -15 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படுவது கீழ் குறிப்பிடப்பட்டவாறாகும்.

| | |
|---|---|
| குறித்த மேலதிக தகைமைகளுக்கு | 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக கல்வி/ தொழிற் தகைமைகளுக்கு | 30 புள்ளிகள் |
| ஏனைய செயலாற்றுகைகள் மற்றும் திறமைகளுக்கு | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் செயலாற்றுகை | 25 புள்ளிகள் |
| **மொத்த புள்ளிகள்** | **100** |

அரசாங்க நியதிகள் சபை, கூட்டுத்தாபனம் அல்லது திணைக்களங்களில் கடமையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை குறித்த நிறுவனத் தலைவர்கள் மூலம் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், நிறுவனத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படாத, தாமதித்து கிடைக்கப்பெறும், முழுமையற்ற மற்றும் தெளிவற்ற விண்ணப்பப்படிவங்கள் எந்த அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை,**
**காக்கை தீவு,**
**மட்டக்குளி, கொழும்பு – 15.**
**011-2521000/ 2521006**
**(www.nara.ac.lk)**

Gazette.lk